> கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு, தான் குணமடைவோம் என்று விசுவாசித்த அதே கணத்தில் குணமாக்கப்பட்டாள் [பார்க்க, மாற்கு 5:25—34].

இயேசுவானவர் தொட்டுணரக் கூடிய குணமாக்கும் அபிஷேகத்தைப் பெற்றிருந்ததுபோல அப்போஸ்தலனாகிய பவுலும் தனது ஊழியத்தின் இறுதிக் காலத்தில் பெற்றிருந்தார்.

> பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன [அப். 19:11—12].

தொட்டுணரக் கூடிய குணமாக்குதலின் அபிஷேகம் பவுலின் சரீரத்தோடு தொடர்புகொள்ளும் எந்தத் துணியையும் வல்லமையினால் தோய்த்திருந்தது. துணிகூடக் குணமாக்கும் வல்லமையைக் கடத்தக் கூடியதாக இருக்கிறது என்பது இதன்மூலம் தெரிகிறது!

இயேசுவானவர் மற்றும் பவுலின் நாட்களுக்குப் பிறகு தேவன் மாறிவிடவில்லை. இன்றும் தேவன் இயேசுவையும் பவுலையும் அபிஷேகித்ததுபோலக் குணமாக்கும் அபிஷகத்தினால் எவரையாவது அபிஷேகிக்கும்படி தெரிந்துகொள்ளுவாரானால், அதற்காக நாம் ஆச்சரியப்படக்கூடாது. ஆனால் இந்த வரங்கள் புதிதாக விசுவாசிகளாக ஆனவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. காலம் கடந்து தாங்கள் உண்மையுள்ளவர்கள், சுயநலமில்லாதவர்கள் என்பதை நிரூபிப்பவர்களுக்கே இது அருளப்படுகிறது.





# 17

# ஆவியின் வரங்கள்

**வே**தாகமம் முழுவதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் திடீரென்று பரிசுத்த ஆவியானவர் இயல்புக்கு அப்பாற்பட்ட திறன்களைக் கொடுப்பது குறித்த எடுத்துக்காட்டுகளை நாம் வேதாகமம் முழுவதிலும் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டில் இந்த இயல்புக்கு அப்பாற்பட்ட திறன்கள் ''ஆவியின் வரங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. இவைகளைச் சம்பாதிக்க முடியாது என்கிறபடியால் இவை வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. என்றாலும், தேவன் தாம் நம்பிக்கை வத்திருப்பவர்களை இவ்வாறு மேன்மைப்படுத்துகிறார். இயேசுவானவர் ''கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்'' என்று சொல்லியிருக்கிறார் [லூக்கா 16:10]. எனவே தேவனுக்கு முன்பாகத் தாங்கள் உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்திருக்கிறவர்களுக்கு தேவன் இந்த வரங்களைக் கொடுப்பார் என்ற நிச்சயம் நமக்கு இருக்கிறது. பரிசுத்த ஆவியானவருக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுப்பது அவசியமாகும். தேவன் இப்படிப்பட்ட மக்களை இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் பயன்படுத்துவார். என்றாலும், தேவன் ஒருமுறை தீர்க்கதரிசனம் சொல்ல ஒரு கழுதையைக் கூடப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே அவர் தாம் விரும்பிய எவரையும் பயன்படுத்துவார். நாம் பரிபூரணராகும் வரை அவர் காத்திருப்பாரானால், நம்மில் எவரையும் அவரால் பயன்படுத்த முடியாது!

புதிய ஏற்பாட்டில், 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் ஆவியின் வரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. மொத்தம் ஒன்பது வரங்கள் உள்ளன:

> எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும்

> வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது (1 கொரி. 12:8–10).

தேவனால் ஆவிக்குரிய வரங்களில் பயன்படுத்தப்படுவதைவிட, ஒவ்வொரு தனிப்பட்ட வரத்துக்கும் எப்படி விளக்கம் கொடுப்பது என்பதைத் தெரிந்திருப்பது முக்கியமான காரியமல்ல. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும், ராஜாக்களும், துவக்க காலப் புதிய ஏற்பாட்டுச் சபையின் ஊழியர்களும் ஆவியின் வரங்களை எப்படி வகைப்படுத்துவது, எப்படி விளக்கம் கொடுப்பது என்பதை அறியாமலேயே அவைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். என்றாலும், புதிய ஏற்பாட்டில் இந்த ஆவியின் வரங்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கிற படியால், தேவன் அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார் என்று தெரிகிறது. பவுல் அப்போஸ்தலனும்கூட ''அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை'' என்று எழுதியிருக்கிறார் (1 கொரி. 12:1).

### ஒன்பது வரங்களும் வகைப்படுத்தப்படுகின்றன

சமீப காலங்களில் இந்த ஒன்பது வரங்களும் மூன்று வகைகளாக வகைப்படுத்தியிருக்கிறார்கள். (1) சொல்லுதல் வரங்கள் – பற்பல பாஷைகளைப் பேசுதல், அந்தப் பாஷைக்கு வியாக்கியானம் கொடுத்தல், தீர்க்கதரிசனம். (2) வெளிப்படுத்தும் வரங்கள் – ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், ஆவிகளைப் பகுத்தறியும் வரம். (3) வல்லமையளிக்கும் வரங்கள் –அற்புதங்களைச் செய்தல், விசேஷித்த விசுவாசம், குணமாக்குதலின் வரம். இந்த வரகளில் மூன்று எதையாவது *சொல்லுகின்றன*, மூன்று எதையாவது *வெளிப்படுத்து கின்றன*, மூன்று எதையாவது *செய்கின்றன.* பற்பல பாஷைகளைப் பேசுதல், பாஷைகளுக்கு வியாக்கியானம் சொல்லுதல் இவைதவிர மற்ற வரங்கள் எல்லாமே பழைய உடன்படிக்கையிலும் வெளிப்படுத்தப்பட் டுள்ளன. குறிப்பிட்ட இரண்டு வரங்களை நாம் புதிய ஏற்பாட்டில் மட்டுமே காண்கிறோம்.

புதிய ஏற்பாடு ''வல்லமையளிக்கும் வரங்களை'' எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்த எந்த விவரத்தையும் கொடுக்கவில்லை.





''வெளிப்படுத்தல் வரங்களைச்'' சரியாகப் பயன்படுத்துவது குறித்தும் அதிகமான விளக்கம் கொடுக்கப்படவில்லை. ஆனால் சொல்லுதல் வரங்களைக் குறித்துப் பவுல் போதுமான போதனைகளைக் கொடுத்திருக்கிறார். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

முதலாவதாக, சொல்லுதல் வரங்கள் பெரும்பாலும் சபைக் கூடுகைகளில் வெளிப்படுத்தப்படும் வரங்களாக இருக்கின்றன. வெளிப்படுத்தலின் வரங்கள் மிகக் குறைவாகவே செயல்படுத்தப்படுகின்றன. வல்லமை வரங்கள் மிகவும் குறைவாகவே செயல்படுத்தப்படுகின்றன. எனவே சபைக் கூடுகைகளில் அதிகமாக வெளிப்படுத்தப்படும் வரங்களைக் குறித்து நாம் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக சொல்லுதல் வரங்களுக்கு அதிகமான மானிட ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. எனவே இவை அதிகமாகத் தவறாகக் கையாளப்படக் கூடிய வரங்களாக இருக்கின்றன. குணமாக்கும் வரத்தில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் ஒரு தீர்க்கதரிசனத்தோடு கூடுதலாக எதையாவது சேர்த்து அதைப் பாழ்படுத்திவிடக் கூடும்.

### ஆவியானவரின் சித்தப்படி...

ஒரு நபரின் சித்தப்படி அல்ல, பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படியே ஆவியின் வரங்கள் கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ளுவது முக்கியமாகும். வேதாகமம் இதை மிகவும் தெளிவாக உறுதிப்படுத்துகிறது:

> இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, *தமது சித்தத்தின்படியே* அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார் (1 கொரி. 12:11 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

> அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், *தம்முடைய சித்தத்தின்படி* பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்தது மாயிருக்கிற... (எபி. 2:4 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

சில குறிப்பிட்ட வரங்களில் ஒருவர் அடிக்கடி பயன்படுத்தப் படலாம். ஆனால் எவரும் இந்த வரங்களை *வைத்திருக்க* முடியாது. நீங்கள் ஒருமுறை ஒரு அற்புதத்தைச் செய்ய அபிஷேகிக்கப் பட்டிருந்தீர்கள் என்பதற்காக, நீங்கள் விரும்பும்போதெல்லாம் அற்புதங்களைச் செய்ய முடியும் என்று அதற்கு அர்த்தமில்லை. அல்லது மறுபடியும் நீங்கள் அற்புதத்தைச் செய்யப் பயன்படுத்தப் படுவீர்கள் என்பதற்கும் இது உத்தரவாதமில்லை.

ஒவ்வொரு வரத்தைக் குறித்தும் வேதாகம எடுத்துக்காட்டுகளை நாம் சுருக்கமாக ஆய்வுசெய்வோம். தேவன் தமது கிருபையையும் வல்லமையையும் எண்ணற்ற வழிகளில் வெளிப்படுத்த முடியும் எனவே ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வரமும் எப்படிச் செயல்படும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லுவது கடினமாகும். மேலும் வேதாகமத்தில் ஒன்பது ஆவிக்குரிய வரங்களைக்குறித்த விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. எனவே நாம் வேதாகமத்தில் எடுத்துக் காட்டுகளைப் பார்த்து, எந்த வகையின்கீழாக அவை வருகின்றன என்பதைப் பார்த்து, அவைகளின் வெளிப்படையான வேறுபாடுகளைக் கொண்டு அவைகளை வரையறை செய்ய வேண்டும். இயல்புக்கு அப்பாற்பட்ட வரங்களின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் பல்வேறு வழிகளில் தம்மை வெளிப்படுத்துகிறபடியால், கண்டிப்பாக வரையறை செய்ய முயலுவதும் ஞானமற்ற காரியமாகும். சில வரங்கள் உண்மையில் பல வரங்களின் சேர்க்கையாக இருக்கலாம். இதைக் குறித்துப் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> வரங்களில் *வித்தியாசங்கள்* உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (1 கொரி. 12:4–7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

### வல்லமையளிக்கும் வரங்கள்

**1) குணமாக்கும் வரங்கள்::** குணமாக்கும் வரங்கள் நோயாளிகளைக் குணமாக்குவதோடு தொடர்புடையவையாகும். இவை சரீரப் பிரகாரமான மக்களுக்குக் குணமளிக்கும்படி திடீரென்று கொடுக்கப்படும் வரங்கள் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைக் குறித்து நான் எந்தக் கேள்வியையும் எழுப்பவில்லை. முந்தைய அத்தியாயத்தில் குணமாக்கும் வரம் செயல்படுத்தப்பட்டதற்கு நாம் ஒரு எடுத்துக் காட்டைப் பார்த்தோம். பெதஸ்தா குளத்தருகேயிருந்த ஒரு வியாதியஸ்தனை இயேசுவானவர் குணமாக்கியது இப்படிப்பட்ட வரத்தினாலாகும் (பார்க்க, யோவான் 5:2–17).

சீரியாவைச் சேர்ந்த நாகமான் என்ற தொழுநோயாளியைக் குணமாக்க தேவன் எலிசாவைப் பயன்படுத்தினார். அவன் அப்போது விக்கிரகாராதனைக்காரனாக இருந்தான் (பார்க்க, 2 இரா. 5:1–14). லூக்கா 4:27 வசனத்தில் இயேசுவானவர் நாகமானின் குணமாகுதலைக் குறித்துச் சொன்னபோது, எலிசாவால் தான் விரும்பிய எந்தத் தொழு





நோயாளியையும் எந்த நேரத்திலும் குணமாக்க முடியவில்லை என்பதை நாம் காண்கிறோம். அவர் திடீரென்று இயல்புக்கு அப்பாற்பட்ட தூண்டுதலைப் பெற்று, நாகமான் யோர்தான் ஆற்றில் ஏழு முறை மூழ்கியெழ வேண்டும் என்று கட்டளையிட்டார். நாகமான் இறுதியில் இதற்குக் கீழ்ப்படிந்தபோது, அவன் தனது தொழுநோய் நீங்கிக் குணமடைந்தான்.

தேவன் குணமாக்கும் வரத்தின்மூலமாகப் பேதுரு அலங்கார வாசலின் அருகேயிருந்த சப்பாணியைக் குணமாக்கும்படி செய்தார் (அப். 3:1–10). அந்த ஊனமுற்றவன் குணமாக்கப்பட்டது மட்டுமின்றி, அந்த அற்புதத்தினால் தொடப்பட்ட பலர் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்கக் கூடிவந்தார்கள். அன்று ஐயாயிரம் பேர் சபையில் சேர்க்கப் பட்டார்கள். குணமாக்கும் வரங்கள் பெரும்பாலும் இரட்டை நோக்கங்களை நிறைவேற்றுகின்றன: நோயாளிகளைக் குணமாக்குதல், இரட்சிக்கப்படாதவர்களைக் கிறிஸ்துவிடம் இழுத்துவருதல்.

அன்று கூடியிருந்தவர்களுக்குச் செய்தி கொடுத்தபோது பேதுரு இப்படிச் சொன்னார்:

> இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? (அப். 3:12).

அந்தச் சப்பாணி குணமாகியதற்குத் தன்னிடமிருக்கும் எந்த வல்லமையோ அல்லது தன்னுடைய பரிசுத்தமோ காரணமல்ல என்பதைப் பேதுரு அங்கிகரித்தார். தேவனே அவனைக் குணமாக்கும் படி தன்னைப் பயன்படுத்தினார் என்பதை ஒப்புக்கொண்டார். இந்த அற்புதத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் இயேசுவை அறியவில்லை என்று அவர் மறுதலித்ததை நாம் அறிவோம் அல்லவா? தேவன் நடபடிகளின் நூலின் முதல் பக்கங்களில் பேதுருவை அற்புத விதமாகப் பயன்படுத்தியிருப்பதை நாம் காணும்போது, அவருக்குச் சித்தமானால் அவர் நம்மையும் அப்படிப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கை அதிகரிக்கிறது.

அந்த மனிதன் எப்படிக் குணமாக்கப்பட்டான் என்பதைப் பேதுரு விளக்க முயன்றபோது, அதை அவர் ''குணமாக்கும் வரம்'' என்று வகைப்படுத்தியிருக்க முடியாது. தானும் யோவானும் ஒரு சப்பாணியைக் கடந்து நடந்துகொண்டிருந்தபோது, தான் திடீரென்று அந்தச் சப்பாணியைக் குணமாக்க முடியும் என்ற விசுவாசத்தினால் அபிஷேகிக்கப்படுவதை மட்டுமே அவர் உணர்ந்திருந்தார். எனவே அவர் இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கும்படி அவனுக்குக்

கட்டளையிட்டு, தனது கையினால் அவனைத் தூக்கிவிட்டார். அந்தச் சப்பாணி ''குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.'' பேதுரு இதற்கு இப்படி விளக்கம் கொடுக்கிறார்:

> அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது [அப். 3:16].

ஒரு சப்பாணியைத் தன் கையினால் பிடித்து, எழுப்பி, அவன் நடப்பான் என்று எதிர்பார்ப்பதற்கு விசேஷித்த விசுவாசம் தேவைப் படுகிறது. இந்தக் குறிப்பிட்ட குணமாக்குதலின் வரத்தோடு விசுவாசத் தைச் செயல்படுத்துவதும்கூடத் தேவைப்பட்டிருக்கிறது.

இந்த வரம் ''குணமாக்கும் வரங்கள்'' என்று பன்மையில் அழைக்கப்படுவதற்குக் காரணம் வெவ்வேறு வகைப்பட்ட நோய்களுக்கு வெவ்வேறு வகைப்பட்ட வரங்கள் பயன்படுத்தப்படு கின்றன என்று சிலர் சொல்லுகிறார்கள். அடிக்கடி குணமாக்கும் வரத்தினால் பயன்படுத்தப்படுபவர்கள் தாங்கள் மற்ற நோய்களைவிட ஒரு குறிப்பிட்ட வகையிலான நோயைக் குணமாக்கவே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சுவிசேஷகனாகிய பிலிப்பு திமிர்வாதக்காரர்களையும், சப்பாணிகளையும் குணமாக்குவதற்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது [அப். 8:7]. எடுத்துக்காட்டாக, கடந்த நூற்றாண்டைச் சேர்ந்த சில சுவிசேஷகர்கள் தங்கள் மூலம் அதிகமாக வெளிப்படுத்தப்படும் குணமாக்கும் வரங்களைச் சார்ந்து, பார்க்கும் திறனோ கேட்கும் திறனோ இல்லாதவர்களைக் குணமாக்குவதிலும், இருதய நோயாளிகளைக் குணமாக்குவதிலும் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதை நாம் அறிவோம்.

**2] விசுவாசம் மற்றும் அற்புதங்களைச் செய்யும் வரம்:** விசுவாச வரமும், அற்புதங்களைச் செய்யும் வரமும் ஒன்றுபோல இருப்பதாகத் தோன்றுகின்றன. இந்த இரண்டு வரங்களினாலும் அபிஷேகிக்கப்படும் ஒருவர் திடீரென்று இயலாததையும் செய்வதற்கான விசுவாசத்தைப் பெறுகிறார். இந்த இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பெரும்பாலும் இப்படிச் சுட்டிக்காட்டப்படுகின்றன: விசுவாச வரத்தின்மூலமாக தனிப்பட்ட ஒருவர் தனக்காக ஒரு அற்புதத்தைப் *பெற்றுக்கொள்ளும்படி* அபிஷேகிக்கப்படுகிறார். ஆனால் அற்புதங்களைச் செய்யும் வரத்தைப் பொருத்தவரையில் மற்றவர்களிடம் அற்புதத்தைச் **செய்யும்படியான** விசுவாசம் ஒருவருக்குக் கொடுக்கப் படுகிறது.





விசுவாச வரம் சில வேளைகளில் ''விசேஷித்த விசுவாசம்'' என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இது *சாதாரணமான* விசுவாசத்துக்கு அப்பால் சட்டென்று கொடுக்கப்படும் விசுவாசமாக இருக்கிறது. சாதாரண விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தம் ஒன்றைக் கேள்விப் படுவதினால் வருகிறது. விசேஷித்த விசுவாசம் பரிசுத்த ஆவியான வரால் சட்டென்று கொடுக்கப்படுவதினால் வருகிறது. இந்த விசேஷித்த வரத்தை அனுபவித்திருப்பவர்கள் திடீரென்று இயலாத காரியங்களும் தங்களுக்கு இயலக்கூடியவையாகத் தோன்றியிருப்ப தாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது *சந்தேகப்படுவது இயலாத காரியமாகி*விட்டிருக்கிறது. அற்புதங்களைச் செய்யும் வரத்திலும் இதுவே உண்மையாக இருக்கிறது.

எவ்வாறு ''விசேஷித்த விசுவாசம்'' சந்தேகப்படுவதை இயலாத தாக்குக்கிறது என்பதற்கு தானியேலின் நண்பர்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் அனுபவம் எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவர்கள் ராஜாவின் விக்கிரகத்தை ஆராதிக்கவில்லை என்பதற்காக எரியும் சூளையில் போடப்பட்டபோது, அவர்கள் எல்லோருக்கும் விசேஷித்த விசுவாச வரம் கொடுக்கப்பட்டது. கடுமையாக எரியும் சூளையில் வெந்துபோகாமலிருப்பதற்குச் சாதாரண விசுவாசத்தைவிட அதிகமான விசுவாசம் தேவைப்படுகிறது. ராஜாவுக்கு முன்பாக வெளிப்படுத்தப்பட்ட இந்த மூன்று இளைஞர்களின் விசுவாசத்தை நாம் பார்ப்போம்:

> சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக் கிறார்; *அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.* விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது மில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளுவதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள் [தானி. 3:16—18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அவர்கள் சூளையில் எறியப்படுவதற்கு முன்பே இந்த வரம் செயல்படத் துவங்கியிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். தேவன் தங்களை விடுவிப்பார் என்பதைக் குறித்து அவர்களுக்கு எந்தவிதச் சந்தேகமும் இருக்கவில்லை.

தீய அரசனாகிய ஆகாபின் ஆளுகையின்போது மூன்றரை ஆண்டு காலப் பஞ்சத்தின்போது காகங்களினால் போஷிக்கப்பட்ட வேளையில் எலியா விசேஷித்த விசுவாசத்தின் வரத்தைச் செயல்படுத்தினார் (பார்க்க, 2 இரா. 17:1–6). தேவன் காலையும் மாலையும் பறவைகளின் மூலமாக உஙகளுக்கு உணவைக்கொண்டுவருவார் என்று நம்புவதற்கு விசேஷித்த விசுவாசம் தேவைப்படுகிறது. தேவன் தமது வார்த்தையில் எங்கேயும் காகங்கள் நமக்கு உணவைக் கொண்டுவரும் என்று வாக்குத்தத்தம் செய்திராவிட்டாலும், நமது தேவைகளைத் தேவன் சந்திப்பார் என்று நம்புவதற்கு சாதாரண விசுவாசத்தைப் பயன்படுத்தலாம். ஏனென்றால் இது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு வாக்குத்தத்தமாகும் (பார்க்க, மத். 6:25–34).

மோசேயின் ஊழியத்தின்போது அற்புதங்களைச் செய்தல் அடிக்கடி நடைபெற்றிருக்கிறது. அவர் சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்தபோதும் (பார்க்க, யாத். 14:13–31) பல்வேறு வாதைகள் எகிப்தைத் தாக்கியபோதும் அவர் இந்த வரத்தைச் செயல்படுத்தினார்.

இயேசுவானவர் ஒருசில அப்பங்களையும் ஒருசில மீன்களையும் கொண்டு ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்களைப் போஷித்தபோது, அவர் இந்த வரத்தைச் செயல்படுத்தினார் (பார்க்க, மத். 14:15–21).

சீப்புரு தீவில் தனது ஊழியத்துக்கு இடையூறு செய்த எலிமா என்ற மந்திரவாதியைப் பவுல் சிறிது காலம் பார்வையற்றவனாக ஆக்கியபோது அவர் அற்புதங்களைச் செய்யும் வரத்தைப் பயன்படுத்தினார் (பார்க்க, அப். 13:4–12).

## வெளிப்படுத்துதல் வரங்கள்

**1) அறிவை உணர்த்தும் வசனமும், ஞானத்தைப் போதிக்கும் வசனமும்:** அறிவை உணர்த்தும் வசனம் என்பது சட்டென்று கடந்த காலத்தைக் குறித்த அல்லது நிகழ்காலத்தைக் குறித்த ஒரு குறிப்பிட்ட விவரத்தை இயல்புக்கு அப்பாற்பட்ட முறையில் தெரிவிப்பதாகும். எல்லாவற்றையும் அறிந்திருக்கும் தேவன் சில வேளைகளில் அதில் ஒரு சிறிய பகுதியைப் பகிர்ந்துகொடுப்பார். எனவேதான் இது அறிவை உணர்த்தும் *வசனம்* என்று அழைக்கப்படு கிறது. ஒரு வசனம் என்பது ஒரு வாக்கியத்தின் ஒரு துண்டான பகுதி யாகும். அறிவை உணர்த்தும் வசனம் என்பது தேவனுடைய அறிவின் சிறியதொரு பகுதியாகும்.

*ஞானத்தைப் போதிக்கும் வசனம்* என்பது அறிவை உணர்த்தும் வசனத்தைப்போலவே இருக்கிறது. ஆனால் இது திடீரென்று *வருங்கால* நிகழ்ச்சிகளைக் குறித்து இயல்புக்கு அபபாற்பட்ட வகையில் கொடுக்கிறது. ஞானம் என்ற கருத்துப்படிவம் பெரும்பாலும்





வருங்காலத்தைக் குறித்ததாகும். என்றாலும், இந்த விளக்கங்கள் யூகங்களாகவே இருக்கின்றன.

அறிவை உணர்த்தும் வசனத்துக்கு நாம் ஒரு பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். எலிசா நாகமான் என்ற சீரியனைத் தொழுநோயிலிருந்து குணமாக்கியபிறகு, அவன் எலிசாவுக்கு அதிகமான பணத்தையும், பொருட்களையும் நன்றிக்காகக் கொடுக்க விரும்பினான். நாகமானின் குணமாக்குதல் தேவனால் கிருபையாக அருளப்பட்டது என்பதற்கு மாறாக, அது விலைகொடுத்து வாங்கப் பட்டது என்று எவராவது சொல்லிவிடக் கூடாது என்பதற்காக எலிசா அந்தக் காணிக்கையை மறுத்துவிட்டான். ஆனால் எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசியோ அதைத் தனது தனிப்பட்ட ஆதாயத் துக்கான ஒரு வாய்ப்பாகக் கண்டான். இரகசியமாக நாகமானிடமிருந்து சிறிதளவு வெகுமதியைப் பெற்றுக்கொண்டான். கேயாசி தான் ஏமாற்றி வாங்கிய வெள்ளியை மறைத்துவிட்டு எலிசாவுக்கு முன்னால் வந்தான். நாம் தொடர்ந்து இப்படி நடந்ததைப் பார்க்கிறோம்.

> கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன்: உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர் கொண்டு வரத் தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா?(2 இரா. 5:25, 26).

கேயாசியின் அசுத்தமான செயலை நன்றாக அறிந்திருந்த தேவன் அதை எலிசாவுக்கு இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் வெளிப்படுத்தினார். இந்த நிகழ்ச்சி அதைச் செயல்படுத்துகிறது. என்றாலும் எலிசா அறிவை உணர்த்தும் வசனம் என்ற வரத்தைத் தான் ‘‘வைத்திருக்கவில்லை.’’ அதாவது அவர் எல்லோரைப் பற்றியும் எல்லா வேளைகளிலும் அறிந்திருக்கவில்லை. அது அப்படியிருக்குமானால், தனது பாவத்தை மறைத்துவைக்க முடியும் என்று கேயாசி ஒருபோதும் நினைத்திருக்க மாட்டான். தேவன் அவ்வப்போது காரியங்களை வெளிப்படுத்தும்போதுதான் எலிசாவால் அவைகளை இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் அறிந்துகொள்ள முடிந்தது. ஆவியானவரின் சித்தப்படி இந்த வரம் செயல்பட்டது.

சமாரியாவில் கிணற்றருகே வந்த பெண்ணிடம் அவளுக்கு ஐந்து புருஷன்மார் இருந்தார்கள் என்று கூறியபோது அவர் அறிவை உணர்த்தும் வசனத்தைச் செயல்படுத்தினார் (பார்க்க, யோவான் 4:17–18).

அனனியாவும் சப்பீராளும் தாங்கள் சமீபத்தில் விற்ற நிலத்தின் முழுக் கிரயத்தையும் சபைக்குக் கொடுப்பதாகப் பொய் சொன்னபோது,

அது பொய் என்பதைப் பேதுரு இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் உணர்ந்துகொண்டபோது அவர் இந்த வரத்தைச் செயல்படுத்தினார் (பார்க்க, அப். 5:1–11).

ஞானத்தைப் போதிக்கும் வசனத்தைப் பொருத்தவரையில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் மூலம் அது அடிக்கடி செயல்படுத்தப் படுவதை நாம் காண்கிறோம். அவர்கள் ஒரு வருங்கால நிகழ்ச்சியை முன்னறிவித்த போதெல்லாம், ஞானத்தைப் போதிக்கும் வசனம் செயல்பட்டது. இயேசுவானவருக்கு இந்த வரம் அடிக்கடி வழங்கப் பட்டது. அவர் எருசலேமின் அழிவையும், தமது சொந்த மரணத்தையும், தமது இரண்டாம் வருகையின்போது நடக்கும் நிகழ்ச்சிகளையும் முன்னறிவித்திருக்கிறார் (பார்க்க, லூக்கா 17:22–36; 21:6–28).

உபத்திரவ காலத்தின் நியாயத்தீர்ப்புகள் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் இந்த வரத்தில் செயல் பட்டார். வெளிப்படுத்தல் புத்தகம் முழுவதிலும் அவர் இதை நமக்காக எழுதிவைத்திருக்கிறார்.

**2) ஆவிகளைப் பகுத்தறியும் வரம்:** ஆவிகளைப் பகுத்தறியும் வரம் என்பது ஆவிக்குரிய உலகில் என்ன நடக்கிறது என்பதைத் திடீரென்று பார்க்கக் கூடிய அல்லது பகுத்தறியக் கூடிய திறனாகும்.

ஒரு விசுவாசியின் கண்கள் அல்லது மனதின் மூலமாகக் காணப்படும் ஒரு தரிசனத்தை ஆவிகளைப் பகுத்தறிதல் என்று வகைப்படுத்தலாம். இத்த வரம் பவுல் பலமுறை கண்டதுபோல, விசுவாசிகள் தேவதூதர்களையும், பிசாசுகளையும், இயேசுவானவரையும் கூடக் காணும்படி அனுமதிக்கிறது (பார்க்க, அப். 18:9–10; 22:17–21; 23:11).

எலிசாவும் அவனுடைய சேவகனும் சீரிய இராணுவத்தினால் விரட்டிவரப்பட்ட போது, அவர்கள் தோத்தான் என்ற பட்டணத்தில் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இந்த வேளையில் எலிசாவின் சேவகன் பட்டணத்தின் மதிலைச் சுற்றி எதிரிகளின் போர்ச்சேவகர்கள் நிற்பதைக் கண்டபோது, அவன் பயப்பட்டான்.

> அதற்கு அவன்: பயப்படாதே, அவர்களோடிருப் பவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண் களைத் திறந்தருளும் என்றான். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ எலிசா வைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான் (2 இரா. 6:16–17).





தேவதூதர்கள் ஆவிக்குரிய குதிரைகளிலும், ஆவிக்குரிய இரதங்களிலும் சுற்றிவருவதை நீங்கள் அறிவீர்களா? ஒருநாள் பரலோகத்தில் நீங்கள் அதைப் பார்ப்பீர்கள். ஆனால் எலிசாவின் சேவகனுக்கு அதைப் பூமியிலேயே காணும் அனுமதி கொடுக்கப் பட்டது.

இந்த வரத்தின்மூலம் மற்றொருவரை ஒடுக்கும் அசுத்த ஆவியை ஒரு விசுவாசியால் பகுத்தறிய முடியும். அது எப்படிப்பட்ட ஆவி என்பதையும் இனம்கண்டுகொள்ள முடியும்.

இந்த வரமானது ஆவிக்குரிய உலகத்தைக் காண்பதை மட்டுமல்ல வேறு வகைப்பட்ட பகுத்தறிதலையும் கொண்டிருக்கிறது. எடுத்துக் காட்டாக, ஆவிக்குரிய உலகத்திலிருந்து ஒன்றை, குறிப்பாக தேவனுடைய சத்தத்தை நம்மால் கேட்க முடியும்.

இறுதியாக, இது சிலர் நினைப்பதுபோல ‘‘பகுத்தறியும் வரம்’’ அல்ல. இந்த வரத்தைப் பெற்றிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் மக்கள் தங்களால் மற்றவர்களின் செயல்நோக்கங்களைப் பகுத்தறிய முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வரத்துக்கு ‘‘குறை கூறி மற்றவர்களை நியாயந்தீர்க்கும் வரம்’’ என்ற பெயரே சரியாக இருக்கும். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக நீங்கள் இந்த ‘‘வரத்தைப்’’ பெற்றிருக்கலாம். ஆனால் இப்போது நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறபடியால், இதிலிருந்து உங்களை நிரந்தரமாக விடுவிக்கவே அவர் விரும்புகிறார்!

## சொல்லுதல் வரங்கள்

**1) தீர்க்கதரிசன வரம்:** தீர்க்கதரிசன வரம் என்பது தெய்வீக தூண்டுதலினால், பேசுபவரின் அறியப்பட்ட மொழியில் திடீரென்று இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் பேசும் திறனாகும். இது எப்போதுமே ‘‘கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்’’ என்ற வார்த்தைகளோடு துவங்குகிறது.

இந்த வரம் பிரசங்கம் செய்வதோ அல்லது போதிப்பதோ அல்ல. தூண்டுதல் பெற்றுப் பிரசங்கிப்பதும், போதிப்பதும் ஓரளவு தீர்க்கதரிசன *அம்சத்தைக்* கொண்டிருந்தாலும் அது தீர்க்கதரிசனம் அல்ல. பலமுறை அபிஷேகம் பெற்றுப் பிரசங்கிப்பவர்களும் போதிப்பவர்களும் தாங்கள் சொல்ல நினைக்காத ஒன்றை இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் சொல்லும்படி தூண்டப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அது தீர்க்கதரிசனம் அல்ல, ஆனால் அது *தீர்க்கதரிசன அம்சத்தைக்* கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

தீர்க்கதரிசன வரம் தன்னில்தானே பக்திவிருத்தி உண்டாக்கு கிறது, புத்திசொல்லுகிறது, ஆறுதல்படுத்துகிறது:

> தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத் தக்கதாகப் பேசுகிறான் [1 கொரி. 14:3].

இப்படியாக, தீர்க்கதரிசன வரம் தன்னில்தானே எந்த வெளிப்பாட்டையும் கொடுப்பதில்லை. அதாவது, அது ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம் இவைகளைப்போலக் கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் இவைகளைக்குறித்து எதையும் வெளிப்படுத்துவதில்லை. என்றாலும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஆவிக்குரிய வரங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து கிரியை செய்யலாம். எனவே தீர்க்கதரிசனத்தின்மூலமாக ஞானத்தைப் போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும் வெளிப்படுத்தப் படலாம்.

ஒரு சபைக் கூடுகையில் ஒருவர் வருங்கால நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கும்போது, உண்மையில் நாம் *வெறும்* தீர்க்கதரிசனத்தை மட்டும் கேட்கவில்லை. தீர்க்கதரிசன வரத்தின்மூலமாகக் கொண்டு வரப்படும் ஞானத்தைப் போதிக்கும் வசனத்தை நாம் கேட்கிறோம். தீர்க்கதரிசன வரம் என்பது ஒருவர் வேதாகமத்திலிருந்து போதனைகளை வாசிப்பது போலிருக்கும்: ''கர்த்தரிலும் அவருடைய சத்துவத்திலும் பலப்படுங்கள்'' அல்லது ''நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.''

புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனமானது ''எதிர்மறையானதாக'' இருக்கக்கூடாது, இல்லாவிட்டால் அது பக்திவிருத்தியையோ, புத்தியையோ, ஆறுதலையோ கொடுக்க முடியாது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல. ஒருவர் கடிந்துகொள்ளப்பட வேண்டியிருக்கும்போது, தான் ''ஆக்கபூர்வமானவை'' என்று கருதும் காரியங்களை மட்டுமே தேவன் சொல்ல வேண்டும் என்று அவர் தமது மக்களுக்குச் சொல்லுவதைக் கட்டுப்படுத்த முயலுவது அவர் தன்னைத் தானே தேவனுக்கு முன்பாக உயர்த்திக்கொள்ளுவதாகும். கடிந்து கொள்ளுதல் என்பது *பக்திவிருத்தி, புத்திசொல்லுதல்* இவைகளின் கீழாகவே வருகிறது. யோவானின் வெளிப்படுத்தல் நூலில் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு ஆண்டவர் கொடுத்த செய்திகளில் கடிந்துகொள்ளுதல் காணப்படுகிறது. அதற்காக அவைகளை ஒதுக்கி விட வேண்டுமா? நான் அப்படி நினைக்கவில்லை.

**2) பற்பல பாஷைகளைப் பேசுதலும், பாஷைகளுக்கு வியாக்கியானம் கொடுத்தலும்:** *பற்பல பாஷைகளைப் பேசும் வரம்* என்பது பேசுபவர் அறியாத ஒரு பாஷையில் திடீரென்று இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் பேசுவதாகும். இந்த வரம் இயல்பாக பாஷைகளுக்கு *வியாக்கியானம் கொடுத்தல் வரத்தோடு* வரும். இது அறியப்படாத பாஷையில் சொல்லப்பட்டதற்கு இயல்புக்கு அப்பாற்பட்ட





வகையில் வியாக்கியானம் கொடுக்கும் திடீரென்று ஏற்பட்டிருக்கும் திறனாகும்.

இந்த வரம் பாஷைகளுக்கு *அர்த்தம் கொடுத்தல்* என்று அழைக்கப்படாமல் பாஷைகளுக்கு *வியாக்கியானம் பண்ணுதல்* என்று அழைக்கப்படுகிறது. எனவே அந்நிய பாஷையில் கொடுக்கப்பட்ட செய்திகளுக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கொடுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இதன் காரணமாக அந்நியபாஷையின் செய்தியும் வியாக்கியானமும் ஒரே அளவிலானதாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

பாஷைகளை வியாக்கியானம்பண்ணும் வரம் தீர்க்கதரிசன வரத்தைப் போன்றதாகும். ஏனென்றால் தன்னில்தானே இவை வெளிப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. இயல்பாக பக்திவிருத்திக்கும், புத்திக்கும், ஆறுதலுக்கும் கொடுக்கப்படுகின்றன. 1 கொரிந்தியர் 14:5 வசனத்தின்படி அந்நியபாஷையும், அவைகளுக்கு வியாக்கியானம் பண்ணுதலும் சேர்ந்துவரும்போது, அது தீர்க்கதரிசனத்துக்குச் சமமாக இருக்கிறது என்று சொல்லலாம்:

> ஆகிலும், அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, வல்லமையளிக்கும் வரங்களை எப்படிச் செயல்படுத்துவது என்று வேதாகமத்தில் சொல்லப்படவில்லை, வெளிப்படுத்தல் வரங்களை எப்படிச் செயல்படுத்துவது என்பதைக் குறித்து அதிகமாகக் கூறப்படவில்லை, ஆனால் சொல்லுதல் வரங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து அதிகமான வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சொல்லுதல் வரங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்துக் கொரிந்து சபையில் குழப்பம் காணப்பட்டபடியால், இதைக் குறித்து விளக்கமளிக்க பவுல் 1 கொரிந்தியர் பதினான்காம் அதிகாரம் முழுவதையும் பயன்படுத்தியிருக்கிறார்.

முக்கியமான பிரச்சினை அந்நிய பாஷையில் பேசுவதைச் சரியாகப் பயன்படுத்துவதைக் குறித்ததாகும். நாம் ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பற்றிய அத்தியாயத்தில் பார்த்தபடி, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கும் எந்த விசுவாசியும் தான் விரும்பிய எந்த வேளையிலும் அந்நிய பாஷையில் ஜெபிக்க முடியும். கொரிந்தியர்கள் தங்கள் சபை ஆராதனைகளில்

அதிகமான அளவு அந்நிய பாஷைகளில் பேசினாலும், அதில் ஒழுங்கு இல்லாமலிருந்தது.

## அந்நிய பாஷைகளின் பல்வேறு பயன்கள்

அறியாத பாஷையைப் பொது இடத்தில் பயன்படுத்துவதற்கும், தனிப்பட்ட பயன்படுத்துதலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ளுவது மிகவும் முக்கியமானதாகும். பரிசுத்த ஆவியான வரின் ஞானஸ்நானத்தைப் பெற்ற எந்த விசுவாசியும் எந்த வேளையிலும் அந்நிய பாஷையில் பேச முடியும் என்றாலும், அது தேவன் அவரைப் பொதுவான இடத்தில் பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தில் பயன்படுத்துவார் என்று அர்த்தமில்லை. அந்நிய பாஷையில் பேசுவதின் *அடிப்படைப்* பயன் ஒவ்வொரு விசுவாசியும் தனது தனிப்பட்ட தியான வாழ்க்கையில் அதைப் பயன்படுத்துவதாகும். என்றாலும், கொரிந்தியர்கள் கூடிவரும் வேளையில் ஒரே நேரத்தில் பலர் அந்நிய பாஷைகளில் பேசினார்கள், அதற்கு வியாக்கியானம் கொடுக்கப்படவுமில்லை. இதனால் எவரும் பக்திவிருத்தியடைய வில்லை [பார்க்க, 1 கொரி. 14:6–12,16–19,23, 26–28].

பொதுவான இடத்தில் அந்நிய பாஷையில் பேசுவதற்கும், தனிப்பட்ட முறையில் அந்நிய பாஷையைப் பயன்படுத்துவதற்கும் இடையில் பிரித்துக் காண்பதற்கு ஒரு வழி தனிப்பட்ட பயன்படுத்து தலை அந்நிய பாஷையில் *ஜெபிப்பது* என்றும், பொது இடத்தில் பயன்படுத்துதலை அந்நிய பாஷையில் *பேசுவது* என்றும் வகைப்படுத்து வதாகும். பவுல் இந்த இரண்டு வகைப் பயன்பாட்டையும் குறித்துக் கொரிந்தியருக்குத் தான் எழுதிய முதலாம் நிருபத்தின் பதினான்காம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இவைகளிலுள்ள வேறுபாடுகள் என்ன?

நாம் அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது, நமது ஆவி தேவனை *நோக்கி* ஜெபிக்கிறது [பார்க்க, 1 கொரி. 14:2, 14]. என்றாலும், ஒருவர் திடீரென்று பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தினால் அபிஷேகிக்கப் படும்போது அது தேவனிட*மிருந்து* சபைக்கு வரும் செய்தியாக இருக்கிறது [பார்க்க, 1 கொரி. 14:5]. வியாக்கியானம் கொடுக்கப் படும்போது அது புரிந்துகொள்ளப்படுகிறது.

வேதவசனங்களின்படி நாம் விரும்பினால் அந்நிய பாஷையில் ஜெபிக்க முடியும் [பார்க்க, 1 கொரி. 14:15]. ஆனால் *பரிசுத்த ஆவியானவரின்* சித்தப்படி மட்டுமே பற்பல பாஷகளைப் பேசும் வரம் செயல்படுகிறது [பார்க்க, 1 கொரி. 12:11].

பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தோடு தொடர்ந்து, வியாக்கியானம் பண்ணும் வரமும் வருகிறது. ஆனால் தனிப்பட்ட முறையில் அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது, அதற்கு





வியாக்கியானம் அளிக்கப்படுவதில்லை. தான் அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது தனது கருத்து பயனற்றதாக இருப்பதாகப் பவுல் சொல்லியிருக்கிறார் [பார்க்க, 1 கொரி. 14:14].

தனிப்பட்ட ஒருவர் அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது, அவர் *மட்டுமே* பக்திவிருத்தியடைகிறார் [பார்க்க, 1 கொரி. 14:4]. ஆனால் பற்பல பாஷைகளைப் பேசும் வரமும் அதைத் தொடர்ந்து வியாக்கியானம் பண்ணும் வரமும் வெளிப்படுத்தப்படும்போது, *முழுச் சபையும்* பக்திவிருத்தி அடைகிறது [பார்க்க, 1 கொரி. 14:4, 5].

ஒவ்வொரு விசுவாசியும் ஆண்டவரோடுள்ள தனது அன்றாட ஐக்கியத்தின் ஒரு பகுதியாக அந்நிய பாஷையில் ஜெபிக்க வேண்டும். அந்நியபாஷையில் ஜெபிப்பதிலுள்ள ஒரு அற்புதமான காரியம் அதற்காக நீங்கள் உங்கள் மனதைப் பயன்படுத்த வேண்டியதில்லை என்பதாகும். அதாவது உங்கள் மனம் வேறு காரியங்களில் ஈடுபட்டிருக் கும்போதுகூட நீங்கள் அந்நிய பாஷையில் ஜெபிக்கலாம். பவுல் கொரிந்தியர்களுக்கு *''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப்* பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக் கிறேன்'' என்று எழுதியிருக்கிறார் [1 கொரி. 14:18 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது]. முழு கொரிந்திய சபையையும்விட அவர் அதிகமாகப் பேச வேண்டுமானால், மிக அதிகமான நேரம் அவர் அந்நிய பாஷையில் பேசியிருக்க வேண்டும்!

நாம் அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது சில வேளைகளில் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம் என்றும் எழுதியிருக்கிறார் [1 கொரி. 14:16–17]. மூன்று முறை நான் என்னுடைய ''ஜெப பாஷையில்'' ஜெபித்தபோது அந்த பாஷையை அறிந்தவர்கள் உடன் இருந்திருக் கிறார்கள். அந்த மூன்று முறைகளும் நான் ஜப்பானிய மொழியில் பேசியிருக்கிறேன். ஒருமுறை நான் ஜப்பானிய மொழியில் தேவனிடம் ''நீர் நல்லவர்'' என்று சொல்லியிருக்கிறேன். மற்றொரு முறை ''உம்மை அதிகமாக ஸ்தோத்திரிக்கிறேன்'' என்றும், மூன்றாவது முறை ''விரைவாக வாரும், விரைவாக வாரும், நான் காத்திருக்கிறேன்'' என்றும் ஜெபித்திருக்கிறேன். இது அற்புதமான காரியமாக இருக்கிறது அல்லவா? எனக்கு ஜப்பானிய மொழியில் ஒரு வார்த்தைகூடத் தெரியாது. ஆனாலும் மூன்று முறை நான் ஜப்பானிய மொழியில் தேவனை ஸ்தோத்திரித்திருக்கிறேன்''!

## அந்நிய பாஷையில் பேசுவது குறித்த பவுலின் போதனைகள்

பவுல் கொரிந்திய சபைக்குத் திட்டவட்டமான போதனைகளைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு கூடுகையிலும் இரண்டு அல்லது மூன்று பேர் மட்டுமே பொதுவாக அந்நிய பாஷையில் பேசுவதற்கு அனுமதிக்கப் பட வேண்டும். அவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் பேசக் கூடாது,

ஒருவர் பேசி முடிப்பதற்காக மற்றவர் காத்திருக்க வேண்டும் [பார்க்க, 1 கொரி. 14:27].

''அந்நிய பாஷையில் மூன்று செய்திகள்'' மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும் என்று பவுல் சொல்லவில்லை. எந்தவொரு ஆராதனையிலும் மூன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்நியபாஷையில் பேசக் கூடாது என்றே அவர் சொல்லியிருக்கிறார். பல்வேறு அந்நிய பாஷைகளைப் பேசும்படி மூன்றுக்கும் மேற்பட்டவர்கள் வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தார்கள் என்றால், அவர்களில் எவரும் பரிசுத்த ஆவியானவருக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களுக்கு ஆவியானவர் சபைக்கு வெளிப்படுத்த விரும்பும் ''அந்நிய பாஷையிலான செய்தி'' கொடுக்கப்படலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். இது இப்படியிராவிட்டால் பவுலின் ஆலோசனை உண்மையில் ஒரு சபையில் கொடுக்கப்படும் அந்நியபாஷைச் செய்தியின் எண்ணிக்கைக்குக் கட்டுப்பாடு வைத்தால் அது பரிசுத்த ஆவியானவரையே கட்டுப்படுத்துவது போல ஆகிவிடுமே? பரிசுத்த ஆவியானவர் ஒரு கூடுகையில் பல்வேறு பாஷைகளைப் பேசும் வரத்தை மூன்றுக்கு மேல் ஒருபோதும் கொடாதிருப்பாரானால், பவுல் இப்படிச் சொல்ல வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது.

பாஷைகளுக்கு வியாக்கியானம் கொடுப்பதிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. சபையில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆவியானவருக்கு இடம்கொடுத்து ''அந்நியபாஷைச் செய்திக்கு'' வியாக்கியானம் கொடுக்கலாம் என்று நினைக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் அர்த்தம் சொல்லுகிறவர்களாகக் கருதப்படுகிறார்கள் [பார்க்க, 1 கொரி. 14:28]. ஏனென்றால் இவர்கள் பாஷைகளுக்கு வியாக்கியானம் செய்யும் வரத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படுவார்கள். இது உண்மையாக இருக்குமானால், பவுல் ''ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்'' [1 கொரி. 14:27] என்று ஆலோசனை கொடுத்தபோது, இதைத்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஒருவேளை அவர் ஒரே நபரே அந்நிய பாஷைச் செய்திகள் *எல்லாவற்றுக்கும்* அர்த்தம் சொல்ல வேண்டும் என்று சொல்லாமலிருக்கலாம். ஒரே செய்திக்குப் பலர் ''போட்டிபோட்டுக் கொண்டு'' அர்த்தம் சொல்லுவதைக் குறித்தே அவர் எச்சரித்தார். வியாக்கியானம்பண்ணும் ஒருவர் ஒரு செய்திக்கு அர்த்தம் கூறுவார் என்றால், வியாக்கியானம்பண்ணும் மற்றொருவர், தான் சிறப்பான அர்த்தம் கொடுப்பதாக நினைத்தாலும், அதே செய்திக்கு அர்த்தம் கொடுக்கக் கூடாது.

பொதுவாக சபைக் கூடுகைகளில் எல்லாமே சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்பட வேண்டும். ஒரே வேளையில் போட்டிபோட்டுக்கொண்டு சொல்லுதல் வரத்தைப் பயன்படுத்துவதின் மூலம் குழப்பத்தை உண்டுபண்ணக் கூடாது. மேலும், விசுவாசிகள் தங்கள்





கூடுகைகளில் வந்திருக்கும் அவிசுவாசிகளைக் குறித்த உணர்வைப் பெற்றிருக்க வேண்டும். பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேசிக் கொள்ளும் போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா? [1 கொரி. 14:23].

எல்லோரும் ஒரே வேளையில் அந்நிய பாஷையில் பேசியதும், அதற்கு வியாக்கியானம் கொடுக்கப்படாமல் இருந்ததுமே கொரிந்திய சபையில் காணப்பட்ட பிரச்சினையாக இருந்தது.

### வெளிப்படுத்தல் வரங்களைக் குறித்த சில அறிவுரைகள்

தீர்க்கதரிசிகளின் மூலமாக ''வெளிப்படுத்தல் வரங்கள்'' வெளிப்படுத்தப்படுவதைக் குறித்தும் பவுல் அப்போஸ்தலன் சில அறிவுரைகளைக் கொடுத்திருக்கிறார்:

> தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன். எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ் சொல்லலாம். தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே. தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது [1 கொரி. 14:29—33].

கொரிந்துசபையில் ''அர்த்தம் சொல்லுகிறவர்கள்'' என்று அறியப்பட்ட சிலர் அடிக்கடி அந்நிய பாஷைக்கு வியாக்கியானம் கொடுத்துவந்ததுபோல, சிலர் தீர்க்கதரிசன மற்றும் வெளிப்படுத்தல் வரங்களில் அடிக்கடி பயன்படுத்துப்பட்டு வந்தார்கள். இவர்கள் ''தீர்க்கதரிசிகள்'' என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப்போன்றவர்களோ அல்லது புதிய ஏற்பாட்டில் அகபு என்ற தீர்க்கதரிசியைப் போன்றவர்களோ அல்ல [பார்க்க, அப். 11:28; 21:10]. மாறாக, இவர்களுடைய ஊழியம் உள்ளூர் சபைக்கு மட்டுமே உரியதாகும்.

ஒரு சபைக் கூடுகையில் மூன்று அல்லது இதற்கு மேற்பட்ட இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் இருந்தாலும், பவுல் மறுபடியுமாக

''இரண்டு பேராவது, மூன்று பேராவது'' மட்டும் தீர்க்கதரிசன ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆவியானவர் ஒரு சபையில் ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தங்களை ஒப்புக்கொடுத்து இந்த வரங்களைப் பெறலாம். இது இப்படியிராவிட்டால், எத்தனை பேர் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்று பவுல் கட்டுப்படுத்தியிருக்கிற படியால் அது ஆவியானவர் கொடுக்கும் வரங்களைச் சபையார் அனுபவிக்க முடியாமல் செய்துவிடும்.

மூன்று தீர்க்கதரிசிகளுக்கு மேலாக இருப்பார்களானால், மற்றவர்கள் பேசாவிட்டாலும்கூடச் சொல்லப்படுவதை நிதானிப்பதில் உதவலாம். இது ஆவியானவர் கூறுவதைப் பகுத்தறியும் வல்லமையை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. அவர்களும் மற்றத் தீர்க்கதரிசிகளால் இப்போது வெளிப்படுத்தப்படும் வரத்துக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கலாம். அல்லது அவர்கள் தீர்க்கதரிசனங் களையும், வெளிப்பாடுகளையும் பொதுவான வகையில் நிதானிக்கலாம். அவை தேவன் ஏற்கெனவே கொடுத்திருக்கும் வெளிப்பாடுகளுக்கு [வேதாகமம் போன்றவை] ஒத்திருக்கிறதா என்று நிதானித்துப் பார்க்க வேண்டும். முதிர்ச்சியடைந்த விசுவாசிகளால் இதைச் செய்ய முடியும்.

இந்தத் தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்றும் [பார்க்க, 1 கொரி. 14:31], ''தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே'' என்றும் [1 கொரி. 14:32] பவுல் சொல்லியிருக்கிறார். அதாவது, தீர்க்கதரிசிகள் மற்றவர்களுக்குக் குறுக்கிடாமல் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். சபையோடு பகிர்ந்து கொள்ளும்படி ஆவியானவர் அவர்களுக்கு தீர்க்கதரிசனத்தையோ அல்லது வெளிப்பாட்டையோ கொடுத்தாலும், அவர்கள் குறுக்கிடக் கூடாது. ஆவியானவர் ஒரே கூடுகையில் பல தீர்க்கதரிசிகளுக்கு வரங்களைக் கொடுக்கலாம் என்பதையும் இது காட்டுகிறது. ஆனால் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் எப்போது தனது தீர்க்கதரிசனத்தைச் சபையாரோடு பகிர்ந்து கொள்ளுவது என்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இது எந்த விசுவாசியினாலும் வெளிப்படுத்தப்படும் எந்தவொரு சொல்லுதல் வரத்துக்கும் பொருத்தமானதாக இருக்கிறது. ஒரு சபைக் கூடுகையில் ஒருவர் ஆண்டவரிடமிருந்து அந்நியபாஷைச் செய்தியையோ அல்லது தீர்க்கதரிசனத்தையோ பெறுவாரானால் அவர் சபையில் சரியான நேரம் வரும்வரை காத்திருக்க வேண்டும். உங்களுடை.ய தீர்க்கதரிசனத்தைக் கொடுப்பதற்காக மற்றொருவருடைய தீர்க்கதரிசனத்திலோ அல்லது போதனையிலோ குறுக்கிடுவது தவறாகும்.

''நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ் சொல்லலாம்'' என்று பவுல் கூறியபோது [1 கொரி. 14:31], அவர்





தீர்க்கதரிசனங்களைப் பெற்றிருக்கும் தீர்க்கதரிசிகளைக் குறித்தே இப்படிக் கூறினார் என்பதை நினைவில் வைத்திருங்கள். சிலர் துரதிருஷ்டவசமாகப் பவுலின் வார்த்தைகளை இந்தப் பின்னணி யிலிருந்து எடுத்து, *ஒவ்வொரு* விசுவாசியும் *ஒவ்வொரு* சபைக் கூடுகை யிலும் தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்று சொல்லுகிறார்கள். ஆவியானவர் தமது சித்தப்படி தீர்க்கதரிசன வரத்தைக் கொடுக்கிறார்.

இன்று முன்பு எப்போதையும் போலவே சபைக்கு ஆவியானவரின் உதவியும், வல்லமையும், பிரசன்னமும், வரங்களும் தேவைப்படுகின்றன. பவுல் கொரிந்திய விசுவாசிகளுக்கு ''ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்'' என்று அறிவுரை சொல்லியிருக்கிறார் [1 கொரி. 14:1]. இது நமது விருப்பத்தின் அளவுக்கும் ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டுக்கும் இடையில் தொடர்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இல்லாவிட்டால் பவுல் இப்படிப்பட்ட அறிவுரையைக் கொடுத்திருக்க மாட்டார். தேவனால் அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று வாஞ்சிக்கும் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் ஆவிக்குரிய வரங்களை உண்மையாக வாஞ்சிக்க வேண்டும். தமது சீஷர்களும் அப்படியே செய்யும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

